ISSN : 2455 - 0531

இனம்

இனம் இனத்தைச் சேரும்

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

# பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

# International E-Journal of Tamil Studies

**இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!**

மலர்:3 இதழ்:12 பிப்ரவரி 2018 Vol. 3 Issue : 12 February 2018



க.பாலாஜி
வி.வசந்தா
சே.முனியசாமி
இரா.சி.சுந்தரமயில்
தி.நிரஞ்சினி
யே.டிலானி
நா.பிரபு
கி.சங்கர நாராயணன்
சு.பேச்சியம்மாள்
மா.யோகராஜ்
த.சத்தியராஜ்
ச.முத்துச்செல்வம்
அ.கோவிந்தராஜன்
ப.மணிகண்டன்
இரா.வைதேகி
மா.விஜயலெட்சுமி
சீ.யுவராஜ்
கா.ராஜகணபதி
மு.முனீஸ்மூர்த்தி
இரா.விஜயராணி
R.NITHYA

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

பிப்ரவரி 2018 மலர் : 3 இதழ் : 12
February 2018 Volume III Issue 12

## உள்ளே ...

செவ்விலக்கியப் பிரதிகளில் பரத்தமை - சமூகவியல் நோக்கில் மீள்வாசிப்பு [தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகைப் பனுவல்களை முன்வைத்து]
முனைவர் க.பாலாஜி | 4

நுண்கடன் திட்டங்களினால் ஏற்படும் விளைவுகள்
வி.வசந்தா | 18

வெண்ணீர்வாய்க்கால் இரா.பாண்டிப்புலவர் வாழ்வும் வரலாறும்
சே.முனியசாமி | 26

நாட்டுப்புறப் பாடல்களின் வளர்ச்சிப் படிநிலைகள்
முனைவர் இரா.சி. சுந்தரமயில் | 35

சசூரின் மொழியியல் ரீதியான அமைப்பியலும் பின்அமைப்பியலும்
திரவியராசா நிரஞ்சினி | 43

வகுப்பறைக் கற்றலில் பவ்லோவின் கற்றல் கோட்பாடு
யேசுஐயா டிலானி | 52

தமிழில் வட்டார வழக்குச் சொல்லகராதிகள் உருவாக்கம்
முனைவர் நா.பிரபு | 61

தமிழ்க் காப்பு இயத்தின புதிய வினைக் கோட்பாடு - உருவாக்கமும் கட்டமைப்பும்
முனைவர் கி.சங்கர நாராயணன் | 65

நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் இராஜபதி மாரியம்மன் கொடை விழா – அறிமுக நோக்கு
முனைவர் சு.பேச்சியம்மாள் | 75

இலங்கையில் தொலைக்காட்சி விளம்பரங்களால் வணிக நடவடிக்கைகளில் ஏற்படும் ஒழுக்க மீறுகைகள்
திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 80

வஜ்ஜாலக்கத்தில் வள்ளுவரின் ஆள்வினைச் சிந்தனை
முனைவர் த.சத்தியராஜ் | 85

ஒச்சாவும் ஒத்தக்காது ஆடும் (நூலறிமுகம்)
முனைவர் ச.முத்துச்செல்வம் | 90

ஐங்குறுநூறு - மருதத்திணைப் பாடல்கள் வெளிப்படுத்தும் தலைவன தலைவியின் உளநிலை
முனைவர் அ.கோவிந்தராஜன் | 94

அகநானூறு சுட்டும் மருதநிலச் சிறப்பு
ப.மணிகண்டன் | 98

பதிற்றுப்பத்தில் உழவும் உழவரும்
இரா.வைதேகி | 102

மலைபடுகடாம் சுட்டும் நன்னன்சேய் நன்னனின் நாட்டுவளம்
மா.விஜயலெட்சுமி | 105

...

சங்ககால மக்களின் வாழ்வியலில் மனிதம்
சி.யுவராஜ் | 109
குறுந்தொகைத் திறனுரைகள் - நூல் மதிப்பீடு
கா.ராஜகணபதி | 114
ஆய்வாளர் அணுக வேண்டிய கருவி நூல்கள்
மு.முனீஸ் மூர்த்தி | 121
மலைபடுகடாம் சுட்டும் விருந்தோம்பல்
முனைவர் இரா.விஜயராணி | 126
Perspectives from second Language acquisition
R.Nithya | 131

...

## இவ்விதழுக்குக் கருத்துரை வழங்கிய மதிப்பீட்டறிஞர்கள்

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் ம.தமிழரசன் (கோவை)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் முகம்மது ரஃபீக் கான் (கோவை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)

மதிப்பிடப்பெற்றது

# ஐங்குறுநூறு - மருதத்திணைப் பாடல்கள் வெளிப்படுத்தும் தலைவன் தலைவியின் உளநிலை



முனைவர் அ.கோவிந்தராஜன்
உதவிப் பேராசிரியர் & இயக்குநர் (பொ.)
பாரதிதாசன் உயராய்வு மையம் மற்றும் பெரியார் உயராய்வு மையம்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024.

ஐங்குறுநூற்றில் மருதத்திணையைப் பாடிய புலவர் ஓரம்போகியார். இவர் ஆதன்அவினி என்னும் சேர மன்னனைப் புகழ்ந்து, மருதத்தில் அமைந்த நூறு பாட்டுக்களைப் பத்துப்பத்தாகப் பகுத்துப் பாடியுள்ளார். அவை, 'வேட்கைப்பத்து' முதலாக எருமைப்பத்து ஈறாக அமைகின்றன. இத்தகு பாடல்களில் வெளிப்படும் தலைவன் - தலைவியின் உளநிலையை அடையாளப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது இக்கட்டுரை.

### தன் தவற்றை உணர்ந்த தலைவன்

தலைவன் பரத்தையோடு நெடுநாள் பழகி வந்தான். அதை அறிந்த தலைவி மனம்வருந்தி உடல் மெலிந்தாள். தான் செய்த தவற்றை உணர்ந்த தலைவன் மீண்டும் தன் தலைவியோடு வாழவேண்டுமென வந்து சேர்ந்தான். பின் தோழியிடம் நான் பரத்தையோடு வாழ்ந்த காலங்களில் நீங்கள் என்னைப் பற்றி என்ன நினைத்தீர்கள் என்றான். அதை அறிந்த தோழி காஞ்சிப் பூவோடு சினையுடைய மீன் எப்படி இருக்கும் அதுபோல் உயர்ந்த குடியில் பிறந்த தலைவி உன்னைத் தாழ்வாகக் கருதினாள் என்றாள்,

வாழி ஆதன் வாழி அவினி
நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க
என்வேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க எனவேட் டேமே! (வேட்கைப்பத்து,1)

என்பதே அப்பாடல்.

### மனம் மாறிய தலைவி

தலைவன் பரத்தையோடு வாழ்ந்து வருகிறான். ஆனால் பாணன் கூறும்போது அவன் செய்த தவற்றை உணர்ந்து மீண்டும் வருகிறேன் என்று கூறுகிறான். அவன் மீண்டுவந்தால் நீ ஏற்றுக்கொள்வாயா என்று கேட்கும் போது அதைத் தலைவி மறுக்கிறாள். தோழியானவள், தலைவியை நோக்கி, தலைவியே இவ்வளவு சினம் கூடாது எனக் கூறுகிறாள். பின் தன் மனம் இறங்கித் தலைவனை உள்ளே மனைக்குள் அனுமதிக்கிறாள் தலைவி. அவன் எவ்வளவு தவறு செய்தாலும் அவனிடம் சினம் கொள்ள வேண்டாம், காரணம் - நீர்க்கரையில் உள்ள வேழச்செடியை வீட்டில் வளர்த்தால் நட்டுவைக்கும் வயலைக் கொடியானது அதைப் பற்றிக் கொண்டு வளரும். அதைப்போல் கொடுமையானவள் பரத்தை. வெளியே சொன்னால் வெட்கக்கேடு, எனவே பரத்தையரோடு உறவு கொண்டு இருந்தும் அவன் நல்லவன் என்று அழைத்துவந்தோம். ஆனால் அவன் நல்லவன் அல்லன் என்கிறாள்.

மனைநடு வயலை வேழம் சுற்றும்
துறைகேழ் ஊரன் கொடுமை நாணி
நல்லன் என்னும் யாமே

அல்லன் என்னும்என் தடமென் தோளே! (வேழப்பத்து,1)

தலைவியின் மனத்தை மாற்றிய தோழி

தலைவனோ, இனிமேல் பரத்தையரொழுக்கம் கைக்கொள்ள மாட்டேன் என்று உறுதியாகக் கூறிவிட்டான். ஆனால் தலைவியோ, அவனிடம் உண்டு என்று மறுக்கிறாள். அதற்குத் தோழி கூறுகிறாள். நீரில் முள்ளிச்செடிகள் நீண்டு வளர்ந்து காணப்படும். மேலும், நீர் நிரம்பிய கரையில் அழகிய நண்டுகள் வாழும். அதில் படிந்து கிடக்கும் ஆம்பலை நண்டுகள் அறுக்கும். அத்தகைய நிலத்தையுடைய தலைவன் பரத்தையோடு தொடர்பின்றி வாழ்வான், உன் மையுண்ட கண்கள் பசலைபாய்ந்து காணப்படுவது ஏனோ? என்று தோழி வினவுகிறாள்,

முள்ளி நீடிய முதுநீர் அடைகரைப்
புள்ளிக் கள்வன் ஆம்பல் அறுக்கும்
தண்துறை ஊரன் தெளிப்பவும்
உண்கண் பசப்பது எவன்கொல் அன்னாய்! (கள்வன்பத்து, 1)

**சூளுரையை மறந்த தலைவன்**

தலைவியோடு தலைவன் தன் உறவைத் தொடர்ந்தான். அப்பொழுது தோழி, அங்குச் சூழ்ந்திருந்த அனைவரின் முன்னிலையில், இனி உன்னை விட்டுப் பிரியமாட்டான் என்று கூறினாள். ஆனாலும் மறுபடியும் தலைவன் பரத்தையோடு பழகியதைத் தலைவி அறிந்தாள். அந்தத் தகவலைத் தனக்கு நெருக்கமான தோழியிடம் கூறியுள்ளாள்.அப்பொழுது, 'தலைவியை இனிப் பிரியமாட்டேன்' என்று முன்னர்த் தான் உரைத்த சூளைத் தலைவன் மறந்துவிட்டானோ? உரைத்த சூளைப் பின்பற்றுதல் நமக்குக் கடன் அன்று என முடிவு செய்துவிட்டானோ? எனக் கூறி வருந்திப் புலம்புகின்றாள் அவள். இதனைப் பின்வரும் பாடலடிகளின்மூலம் அறிய முடிகிறது.

அம்ம வாழி தோழி மகிழ்நன்
கடனன்று என்றும் கொல்லோ நம்மூர்
முடமுதிர் மருதத்துப் பெருந்துறை
உடனாடு ஆயமோடு உற்ற சூளே! (தோழிக்குரைத்த பத்து, 1)

தொடர்தவறு செய்யும் தலைவனை எச்சரிக்கும் தலைவி

முதல்முறையாகத் தலைவன் ஒரு பரத்தையோடு பழகினான். மீண்டும் பிற பரத்தையரோடு பழகிக் காலங் கழித்தான். அதனால் முதற்பரத்தை தலைவனை வெறுத்து ஒதுக்கினாள். அதை அறிந்துகொண்டாள் தலைவி. தலைவனோ சிலநாள் கழித்துத் தலைவியின் வீட்டிற்குத் திரும்பினான். பாணன் உள்ளிட்டோர் தலைவனின் நிலையை எடுத்துக் கூறினர். ஆனால் தலைவியோ தலைவனின் நிலை அனைத்தும் முன்பே எனக்குத் தெரியும் என்கிறாள். 'காவிரியாற்றின் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம் போல் பரந்து காணப்படும் உன் அகன்ற மார்பைப் பொருந்த அவள் (பரத்தை) மறுத்துவிட்டாளோ?, கள்ளைக் குடித்து விட்டு அதன் மயக்கத்தில் அவள் அவ்வாறு செய்திருப்பாள், மயக்கந் தெளிந்ததும் அவள் உன்னைத் தேடினாலும் தேடலாம். எனவே நீ அவளிடமே சென்றுவிடு!' என்று ஊடல் கொள்கிறாள் தலைவி.

மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ
யாணர் ஊரநின் மாண்இழை அரிவை
காவிரி மலிர்நிறை அன்னநின்
மார்புநனி விலக்கல் தொடங்கி யோளே! (புலவிப்பத்து, 2)

**தலைவனின் தவற்றை எதிர்கொள்ளும் தோழி**

தலைவியின் இடைவைப் பெற்று தலைவன் தன் விட்டிற்க்கு சென்றான், பின் அங்கிருந்து சென்று பரத்தையோடு இன்பம் கண்டான் மீண்டும் அங்கிருந்து சென்று மனைவியிடம் கேட்டு

உள்ளே சென்றான் அப்பொழுது தோழி தலைவனை வரவிடாமல் மறுத்தாள். நீரில் வாழ்ந்து வரும் சம்பங்கோழியை (சேவலை) நினைத்து அதே இனத்தின் நீலநிறமுடைய கூர்மையான நகத்தையுடைய பெட்டை காத்திருந்து வாழும் ஊரைச் சேர்ந்த தலைவன் நீ. தலைவிக்கோ உன் அகன்ற மார்பு புளிங்காயின் வேட்கையை விளைவிப்பதின்றி, நினைக்கும்போதெல்லாம் புலவி கொள்வதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது என்று தோழி கூறுகின்றாள். இதனை உணர்த்தும் பாடலடிகள் வருமாறு:

நீர்உறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை வயாஅம் ஊர
புளிங்காய் வேட்கைத்து அன்றுநின்
மலர்ந்த மார்(பு) இவள் வயாஅ நோய்க்கே! (தோழிகூற்றுப்பத்து,1)

ஞாயிற்றின் ஒளியை மறைக்க இயலுமோ?

தலைவனைப் பழித்துத் தலைவி கூறும்போது, நீ விரும்பிய காதல் பரத்தையோடு தழுவியபடி நேற்றுப் புனலாடினாய். அதை ஊரார்கள் பார்த்து விட்டனர். எனவே ஊர்வாயை அடைக்க முடியாது அது எப்படி என்றால் சூரியனின் ஒளியை எப்படி மறைக்க முடியாதோ அதைப் போன்றது என்று தலைவி புலக்கிறாள். இக்கருத்துடைய பாடல் வருமாறு:

சூதார் குறுங்தொடிச் சூரமை நுடக்கத்து
நின்வெங் காதலி தழீஇ நெருநை
ஆடினை என்ப புனலே அலரே
மறைத்தல் ஒல்லுமோ மகிழ்ந
புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்றது ஒளியே (புனலாட்டுப் பத்து, 1)

**தலைவனை எள்ளி நகையாடும் பரத்தை**

குருகு ஆமை ஓட்டினை உடைத்து அதன் வெள்ளையான வயிற்றில் இறைச்சியை உண்டு மிஞ்சிய ஆமை இறைச்சியைக் கதிர் அறுத்த உழவர்கள் கொண்டு உணவோடு சேர்த்து உண்பார்கள். அதைப் போல் நான் உன்னை விரும்பினேன் என்று உன் மனையாள் கேள்விப்பட்டால் மிகவும் வருந்துவாள் என்று எள்ளி நகைக்கின்றாள் பரத்தை. இதனை உணர்த்தும் பாடலடிகள் வருமாறு:

குரு(கு) உடைத்(து) உண்ட வெள்அகட்டு யாமை
அரிப்பறை வினைஞர் அல்குமிசைக் கூட்டும்
மலர்அணி வாயில் பொய்கை ஊர!நீ
என்னை நயந்தனென் என்றிநின்
மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே (புலவி விராய பத்து,1)

தலைவனின் பரத்தைமையைக் கடியும் தோழி

தலைவனுக்கு அண்மையில்தான் பரத்தையோடு தொடர்பு ஏற்பட்டது. அதை அறிந்த தலைவி கோபம் கொண்டாள். அவள் தலைவன் கொடியவன் என்றாள், அதனைக் கேட்ட தோழி தலைவனுக்குக் கூறியது. தவறு செய்யும் ஆண்மகனைத் தாய்தந்தை கேட்பின் மகனுக்கு மனத்தில் அச்சமும் கவலையும் தோன்றும். ஆனால் மனைவி கண்டிக்கும் போது உரிமையும் இன்பமும் தோன்றும். எனவே தலைவியைக் காட்டிலும் தாய்தந்தையர் உரிமை மிக்கவர்கள் என்றாள் தோழி. மேலும் குளிர்ந்த நீரில் படிந்து ஆடும் பெரிய கொம்பினை உடைய எருமை இறுக்கமாக்க் கட்டப்பட்ட தோணி போல் தோன்றும் உன்னைக் கடிந்து கொள்ளும் தாய்தந்தையர் இளமையான இவளைக் காட்டிலும் கடுமையுடையவர்களாகக் காணப்படுகின்றனர் என்கிறாள். இதனையுணர்த்தும் பாடலடிகள் பின்வருமாறு:

தண்புனல் ஆடும் தடங்கோட்(டு) எருமை

திண்பிணி அம்பியில் தோன்றும் ஊர
ஒண்தொடி மடமகள் இவளினும்
நுந்தையும் யாயும் கடியரோ நின்னே (எருமைப்பத்து, 8)

### தொகுப்புரை

ஐங்குறுநூற்றில் வேட்கைப்பத்து முதல் எருமைப்பத்து வரை மருதத்திணைப் பாடல்கள் அமைந்துள்ளன. தலைவியைப் பிரிந்து பரத்தையரோடு இன்பந் துய்க்கும் தலைவனின் செயல்பாட்டையும், அதனால் தலைவி விருந்தித் தவிக்கும் நிலையையும், தோழி அவளுக்கு ஆறுதலாய்த் திகழும் நிலையையும், பரத்தையிற் பிரிந்து தம் மனைநோக்கித் திரும்பும் தலைவன் தோழியின் துணைகொண்டு தலைவியின் ஊடலைத் தீர்க்கும் நிலையையும் ஐங்குறுநூறு - மருதத்திணைப் பாடல்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

### பார்வை நூல்


- சோமசுந்தரனார் பொ.வே., 1972(ம.ப.), ஐங்குறுநூறு மூலமும் உரையும், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.